# தேனாம்பேட்டை – வண்ணாரப்பேட்டை: ஜனவரியில் மெட்ரோ ரயில் போக்குவரத்து

சென்னை, டிச. 28: சென்னை தேனாம் பேட்டை(ஏ.ஜி.- டி.எம்.எஸ்.) - வண் ணாரப்பேட்டை இடையே மெட்ரோ ரயில்போக்குவரத்து ஜனவரி மாத இறு தியில் தொடங்கும் என்று மெட்ரோ ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனை முன்னிட்டு, இத்தடத்தில் பாதுகாப்பு ஆணையரின் ஆய்வு மற் றும் சோதனை ஓட்டம் ஜனவரி 15-ஆம் தேதிக்கு முன்னதாக நடைபெற வுள்ளது.

வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரை முதல் வழித் தடத்திலும், சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் நடந்து வந்தன. இதில், இரண்டாவது வழித்தடப் பணி கள் நிறைவடைந்து மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது. முதல் வழித் தடத் தில், தேனாம்பேட்டை(ஏ.ஜி.டி.எம். எஸ்)-வண்ணாரப்பேட்டை இடையே 10 கி.மீ. தூரத்தில் சுரங்கப்பாதை பணி கள் நிறைவடைந்துள்ளன. இந்தப் பாதையில் வரும் ஜன வரி மாத இறுதியில் மெட்ரோ ரயிலை இயக்க அதிகாரி கள் திட்டமிட் டுள்ளனர்.



இது குறித்து சென்னை மெட்ரோ ரயில்வே அதி காரிகள் கூறி யது: சென்னை யில் ரூ.20,000 கோடி மதிப்பில் 44 கி.மீ. தொலைவு மெட்ரோ ரயில் போக்குவ ரத்துத் திட்டத்தில், 34 கி.மீ. தூர பணி கள் முடிவடைந்து ரயில்கள் இயக் கப்படுகின்றன. மீதமுள்ள தேனாம் பேட்டை- வண்ணாரப்பேட்டை இடையேயான 10 கி.மீ. தூரத்துக்கு சுரங்கப்பாதை மற்றும் ரயில் நிலை யங்கள் கட்டுமானப் பணிகள் நிறை வடைந்துள்ளன. இந்தப் பாதையில் சிக்னல்கள் அமைக்கும் பணி நிறைவ டைந்துவிட்டது. காற்றோட்ட வசதி, குளிர்சாதன வசதி ஆகியவை ஏற்படுத் தப்பட்டுள்ளன. சுரங்க ரயில் நிலை யங்களில் சிக்னல் முறை, நடைமேடை திரை கதவுகள் ஆகியவற்றை பொறி யாளர்கள் தற்போது பரிசோதித்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, பாதுகாப்பு ஆணையரின் ஆய்வு வருகிற 2019 ஜன வரி 15-இல் நடைபெறும் என எதிர் பார்க்கிறோம். இதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக் கப்பட்டுவிட்டன.

வண்ணாரப்பேட்டை, மண்ணடி, உயர்நீதிமன்றம், சென்ட்ரல் மெட்ரோ, அரசினர் தோட்டம், எல்.ஐ.சி, ஆயி ரம் விளக்கு, ஏஜி-டிஎம்எஸ் ஆகிய 8 சுரங்கப்பாதை ரயில் நிலையங்களில் சோதனை ஓட்டம் நடத்தப்படவுள் ளது. இந்த ஆய்வு முடிந்த பிறகு, ஜன வரி இறுதியில் மெட்ரோ ரயில் போக் குவரத்து தொடங்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்தப் பாதையில் ரயில் போக்கு வரத்து தொடங்கியதும் வண்ணா ரப்பேட்டையில் இருந்து நேரடியாக விமான நிலையத்துக்கு பயணிக்க முடி யும். கீழ் அடுக்கு, மேல் அடுக்கு என இரண்டு அடுக்குகளைக் கொண்ட சென்ட்ரல் மெட்ரோ ரயில்நிலை யம், பயணிகளுக்கு பிரமிப்பை உரு வாக்கும். முதல் அடுக்கில் எழும்பூ ரில் இருந்து வரும் ரயில்களும், இரண் டாவது அடுக்கில் ஏ.ஜி.-டி.எம்.எஸ். ரயில் நிலையத்தில் இருந்து வரும் ரயில் களும் நிற்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன என்றனர்.